# அன்பு

## முதலானவர் முடிவானவர்

அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது;
அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு
தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது,
அயோக்கியமானதைச் செய்யாது,
தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு
நினையாது,
அநியாயத்தில் சந்தோஷப்படாமல்,
சத்தியத்தில் சந்தோஷப்படும்.
சகலத்தையும் தாங்கும், சகலத்தையும்
விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும்,
சகலத்தையும் சகிக்கும்.
அன்பு ஒருக்காலும் ஒழியாது. நிறைவானது
வரும்போது குறைவானது ஒழிந்துபோம்.
இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு
இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில்
அன்பே பெரியது.


சகோ. எல்விஸ் ஷான் பீட்டர்ஸ்
(www.soul2win.com)

# 1




# பரிசுத்தப்படுத்து

நமக்கு பிரியமானவர்கள் சொல்லும் வார்த்தையை நாம் எத்தனை கவனமாய் கேட்கிறோமோ அதே கவனத்தோடு நாம் தேவனுடைய வார்த்தையை கேட்க வேண்டும் என்றும், தேவனே நம்முடைய பிரியமாய் இருக்க வேண்டுமென்றும் தேவன் விரும்புகிறார். நமது சொல்லும் செயலும் தேவனை விருப்பப்படுத்தலாம், ஆனாலும் நம்முடைய உள்ளம் அவரை விட்டு வெகுதூரம் இருப்பதை அவர் அறிகிறார். "பரிசுத்தப்படுத்து" என்ற இந்த தலைப்பின் கீழ் தேவன் பழைய ஏற்பாட்டில் மோசேயைக் கொண்டு தம்முடைய ஜனத்தின் கவனத்தை ஈர்த்த விதத்தை வாசிக்கலாம்.



# பரிசுத்தப்படுத்து

> "கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்றார்"
> - மத்தேயு (13:9)

நம் தேவனாகிய இயேசு கிறிஸ்து, வேதத்தில் பல இடங்களில் நம்மோடு உவமையாகவும், தீர்க்கதரிசனமாகவும், நேரடியாகவும் பேசியிருக்கிறார். காதுகள் கேட்கும் வார்த்தைகளின் தெளிவான அர்த்தங்களை அறிய தேவன் நம்மை அழைக்கிறார். நம்மில் அநேகர் கேட்கிற வார்த்தைகளின் பொருளை உணருவதில்லை, அதன்படி நடப்பதும் இல்லை. முக்கியமாக தேவனுடைய வார்த்தைக்கு.

போதகர் தேவனுடைய வார்த்தையை பிரசங்கித்து முடிக்கும் போது, அதில் எத்தனை கருத்துக்களை நாம் நினைவில் கொண்டிருக்கிறோம் என்பதை ஆராய்ந்தாலே, நாம் தேவனுடைய வார்த்தையின் மீது கொண்டிருக்கும் ஆர்வத்தை அறிந்து கொள்ளலாம். நமக்கு கவனம் சிதறுவதும், தூக்கம் வருவதும், மறந்து போகும் சுபாவங்கள் இருப்பதும் - இயல்பே.

ஆனாலும், ஓர் மணவாட்டி தனது மணவாளன் தன்னோடு நேசமாக பரிமாறிய வார்த்தைகளைக் குறித்து இத்தனை அஜாக்கிரதையாய் இருப்பாளோ?

- காதாரக் கேட்பாள்
- மனதார உணருவாள்
- அதன்படியே செய்வாள்
- மணவாளனின் அன்பையும், பாராட்டையும் பெற்றுக்கொள்வாள்



**மணவாளன்**
(ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து)




**மணவாட்டி**
(சபையாகிய நாம்)

சபையே, நாம் தேவனுடைய வார்த்தையை குறித்து அத்தனை தாகமாயிருக்கிறோமா என்றும் தாகமாய்க் கேட்கிறோமா என்றும் ஆராய்வோம்.

## கேட்பதில் கவனம்

வகுப்பில் மாணவனுக்குச் சொல்லித்தரப்படும் பாடங்களை, கேட்டுப் புரிந்து கொள்ளமுடியாமல் போனாலோ, அல்லது கேட்பதில் கவனம் சிதறினாலோ, கேட்டதின் பயன் தான் என்ன? விழிப்பாய்ப் பாடங்களை கேட்டால் தானே அடுத்த வகுப்பிற்குத் தேர்ச்சி பெற முடியும்.




ஆசிரியரின் பாடத்தை

- கவனமாகக் கேட்க வேண்டும்
- பொருள் புரிய வேண்டும்
- பயிற்சிக்க வேண்டும்
- தேர்ச்சி பெற வேண்டும்

இப்படியாகக் கவனமாக கேட்பதின் முறைகளை பட்டியலிட்டுக் கொண்டே போகலாம்.

ஓர் விலாசத்தை வைத்து வழி தேடி கொண்டிருப்பவருடைய காதுகளும் அதிக கவனமாக இருக்க வேண்டும். இல்லையென்றால் அவர் அந்த வீட்டைக் கண்டுபிடிப்பது கடினம். வலது, இடது, முதலாம் சந்து, இரண்டாம் தெரு என பல விஷயங்களைக் கவனமாய்க் கேட்டு, பின் செல்ல வேண்டும்.




இவ்வாறே நாமும் தேவனுடைய வார்த்தையில் கவனம் செலுத்தி நம்முடைய மோட்ச யாத்திரைக்கு பயணிக்க வேண்டும். கவனம் சிதறினால், வழி தவறுவோம். ஆபத்தில் சிக்குவோம். என்ன வியப்பு, கேட்பதில் இத்தனை கவனம் தேவைப்படுகிறதா.

## கூர்மையான செவிகள்

சற்றுப் பொறுங்கள். கண்கள் தெரியாதவர்களின் காதுகளின் கூர்மையைக் கண்டிருக்கிறீர்களா? மிகவும் கவனமான கூர்மையான காதுகள், நாம் ஏன் அப்படி இருப்பது இல்லை. நமக்கும் தேவன் அதே காதுகளைத்தானே கொடுத்திருக்கிறார். ஆனால் நமக்குக் கண்கள் இருக்கிறதே என்ற சிந்தனை நம்மை அவ்வாறான கூர்மையான காதுகளை உடையவர்கள் ஆவதில் இருந்து தடுக்கிறது.



ஆம். கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, நம் கண்கள் திறக்கப்பட்டதில் இருந்து, நமக்கு தேவனுடைய பல வார்த்தைகள் கேட்பதில்லை. நம் கண்கள் மூடியிருந்தால் அந்த சத்தத்தைக் கவனமாக கேட்டிருப்போம். நீங்கள் காண்கிற காட்சி உங்களுக்கு ஏமாற்றத்தைக் கொடுக்கலாம். அவிசுவாசத்தைக் கொடுக்கலாம், அடுத்தது என்ன என்ற கேள்வியை எழுப்பலாம். எனக்குக் கண்கள் தெளிவாய் இருக்கும் வரை, என்னுடைய பாதைக்கு வழித்துணையாக யாரும் தேவையில்லை. என் கண்கள் காணும் காட்சி செழிப்பாக, இருக்கும் வரை எனக்கு யாரும் தேவை இல்லை. இயேசுவைக் கூட தேட மாட்டோம்.



நம்முடைய பாதை இருளடையவேண்டும். கண்கள் ஒளி இழக்க வேண்டும். நாம் இடறி விழ வேண்டும். அப்போது தான் எனக்கு ஒருவருடைய துணை தேவைப்படுகிறது. வழிகாட்ட, தாங்க, உதவி செய்ய எனப் பல வேலைக்கு  அந்நாளில் இருந்து அவர்(Guide) காட்டுவது தான் நமக்கு வழி. அவர் விவரிப்பது தான் நமக்கு உலகம்.

இன்றும், நாம் தேவனை நோக்கி "தேவனே, என் கண்கள் காணும் வழியல்ல, நீர் சொல்லும் அடியேன் கேட்கிறேன். உம்முடைய வார்த்தைகளைக் கொண்டு என்னை வழிநடத்தும், நான் என்ன செய்ய வேண்டும்? உமக்குப் பிரியமானவைகள், உமது நீதி நியாயங்கள், கற்பனைகள், கட்டளைகள் இவைகளுக்கு செவிகொடுத்து உம்மில் நிலைத்திருக்கும் வாழ்க்கையை எங்களுக்குத் தாரும்" என்று ஜெபிப்போம்.

> "உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது."
> **- சங்கீதம் 119:105**

நம் கண்களுக்கு காற்றும், கடலலையும் மாத்திரமே தெரியும். அவருடைய வார்த்தையை மட்டுமே கேட்போமானால் கடலின் மேல் நடப்பவர்கள் ஆவோம். கடலின் ஆழத்தில் ஓர் பாதையைக் காட்டுவார். இப்படியாக தேவன் நம்மோடு எப்போதும் நிரந்தரமாக வாசம் செய்ய விருப்பமுள்ளவராயிருக்கிறார். இதற்கு வேதமே சாட்சி. நாமே அவரை விட்டு, ஒவ்வொரு கட்டத்திலும், விலகிச் செல்கிறவர்களாய் இருக்கிறோம்.

## "பரிசுத்தம்"




> “கர்த்தருடைய சத்தத்தை அவர்கள் கேட்டார்கள்”
> - ஆதி.3:8

நமது முற்பிதாக்களாகிய ஆதாமும், ஏவாளும் தேவனுடைய சத்தத்தைக் கேட்கும் - ஐக்கியம் உடையவர்களாய் இருந்தார்கள். தேவன் அவர்கள் மத்தியில் வாசமாயிருந்தார். பின்னர், அந்த சிலாக்கியத்தை விட்டு விலகினவர்களாய், ஏதேனில் இருந்து வெளியேறினார்கள். நம்முடன் இருக்க விரும்பிய தேவனை விட்டு விலகி வந்து விட்டோம்.

ஆனாலும், இரண்டாம் முறையாக, தேவன் இந்த ஐக்கியத்தை தம்முடைய தாசனாகிய மோசேயைக் கொண்டு புதுப்பிக்க விரும்பினார் என்பதை இந்த வசனத்தினால் இருந்து அறியலாம்.

> "கர்த்தர் மோசேயை நோக்கி... நான் உன்னோடு பேசும் போது ஜனங்கள் கேட்டு சகல ஜனங்களுக்கு பிரத்தியட்சமாக..."
> - யாத்திராகமம் 19 : 9,11

அன்றாடம் ஒரு நபர், நம் மத்தியில் இருக்கிறாரென்றால், அவர் மிக விசேஷமாய்த் தோன்றமாட்டார். மாதம் ஒரு முறையோ அல்லது வருடம் ஒரு முறையோ நம்மை பார்க்க வருகிறார் என்றால் நமது கவனம் முழுவதும் அவர் மேல் இருக்கும். அவர் மிக விசேஷமானவராக மாறுகிறார்.



எத்தனை தான் முக்கியமான நபராக இருந்தாலும், அன்றாடம் நம்மோடு இருந்தால், அவரை நாம் விசேஷப்படுத்துவது இல்லை. மாறாக சில சமயங்களில் உதாசீனப்படுத்தியும் விடுகிறோம். தேவனையும் நாம் அவ்வாறே உதாசீனப்படுத்தியுள்ளோம்.

ஆகவே தான் அன்று பழைய ஏற்பாட்டில் வாக்குத்தத்தத்தின்படி நமது முற்பிதாக்களாகிய இஸ்ரவேலை தேவன் எகிப்திடம் அடிமைகளாக விட்டு வைத்தார். அவருடைய வல்லமையையும், அதிசயங்களையும், அற்புதங்களையும், தேவையையும் நிறைவாய் உணரும்படி அப்படி செய்தார்.

## தேவனை உதாசீனப்படுத்துதல்

நமது தேவன் உதாசீனப் படுத்தப்படுவதை விரும்பாதவர். நமது முழு கவனமும் அவர் மேல் இருக்க விரும்புகிறார். வீட்டில் இருக்கும் உங்கள் குழந்தையை உதாசீனப்படுத்திப் பாருங்கள். மூன்று வயது என்றே வைத்துக் கொள்வோம். அவரை விட்டு விட்டு இன்னொருவரைக் கொஞ்சினாலோ, அவருக்குரிய பாசம் வேறு யாரிடம் செலுத்தப்பட்டாலோ, அவரைக் கவனிக்காமல் இருந்தாலோ அவர் கோபமடைவார். அந்த குழந்தைக்கு என்ன தெரியும். ஆனாலும் அதனால் உதாசீனப்படுத்தப்படுவதை தாங்கிக்கொள்ள முடியாது.



இவ்வாறாக, குழந்தை முதற்கொண்டு பெரியவர் வரையிலான, சாதாரண மனுஷர்களாகிய நம்மாலேயே உதாசீனப் படுத்தப்படுவதை தாங்கிக்கொள்ள முடியவில்லை என்றால், நம்மைப் படைத்த தேவன் எத்தனை கவனத்திற்குரியவர்.

நமக்கு ஒருவர் மேல் இருக்கும் அன்பினால், அவருடைய வார்த்தையை கேட்க நம்மையறியாமலேயே நாம் ஆயத்தப்பட்டிருப்போம். தன்னை முழுவதும் ஆயத்தப்படுத்திக்கொண்டு வருபவனிடமே நம் தேவன் பேச அதிக விருப்பமுள்ளவராயிருக்கிறார். நம்மால் அசட்டை செய்யப்படும்படிக்கு தேவன் சாதாரணமானவரல்லவே. தம்மை அசட்டை செய்யும் எந்த ஜனத்தையும் அவர் விரும்பார்.

## தேவனுடைய முக்கியத்துவத்தை உணரும் திட்டம்

நமது முற்பிதாக்களாகிய ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபின் தேவனை இஸ்ரவேலர் சரியாக கண்டு கொள்ளவில்லை.  தேவனுடைய திட்டத்தின்படி இவர்கள் யோசேப்பினால் எகிப்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். அங்கு அவர்கள் சந்தோஷமாய் இருந்தார்கள். யோசேப்புடன், தேவன் இருந்தபடியால், பார்வோனின் தயவு யோசேப்புக்கும், அவர் மூலமாய் இஸ்ரவேலுக்கும் நிறைவாயிருந்தது.

சிறிது காலம் கழித்து யோசேப்பை அறியாத வேறொரு பார்வோன் ராஜா எழும்பினான். இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோருமே ஒடுக்கப்பட்டார்கள். அவர்களை அடிமைகளாக்கினார்கள். அவர்கள் சுதந்திரம் பறிபோனது. அவர்களை தேற்றுவார் யாருமில்லை. தங்களுடைய தேவைகளுக்காகவும், ஜீவனுக்காகவும் அடிமைகளாய் இருந்தார்கள். இந்த நெருக்கமும், இஸ்ரவேலருக்கு தேவனால் அனுமதிக்கப்பட்ட ஒன்று தான்.

எகிப்திடம் சிறைப்பட்ட இஸ்ரவேலர், தங்களால் ஒன்றும் இயலாது என்பதை நிச்சயமாய் அறிந்திருந்தார்கள். இன்று நம்மிடமிருந்தும் அதே நிலைமையைத் தான் தேவன் எதிர்பார்க்கிறார், தேவனை ஊக்கமாய்த் தேடும் ஒரு நிலைமை. இஸ்ரவேலராகிய, யாக்கோபுக்கு தேவன் சொன்னது,


> "நீ எகிப்து தேசத்துக்குப் போகப் பயப்பட வேண்டாம்."
> - ஆதி. 46 : 3, 4

என்பதாகும். ஆனால், இன்று இஸ்ரவேலுக்கோ பயம் மட்டுமே நிலையாயிருக்கிறது. பின்னும் தேவன் யோசேப்பைக் கொண்டு தங்கள் சகோதரரை இவ்வாறாகத் தேற்றினார்.

> "ஆனாலும் தேவன் உங்களை நிச்சயமாய்ச் சந்தித்து... ஆணையிட்டுக் கொடுத்திருக்கிற தேசத்துக்கு போகப் பண்ணுவார்"
> - ஆதி. 50 : 24

இவைகள் இஸ்ரவேலுக்கு அளிக்கப்பட்ட வாக்குத்தத்தங்கள். ஆனால் இஸ்ரவேலரின் நிலைமையோ

> "அடிமைத்தனத்தினால் தவித்து, முறையிட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்கள் அடிமைத்தனத்திலிருந்து முறையிடும் சத்தம் தேவசந்நிதியில் எட்டினது... அவர்கள் பெருமூச்சைக் கேட்டு... நினைவுகூர்ந்தார்"
> - யாத்திராகமம். 2: 23, 24, 25



தேவனை மறந்திருந்த மக்கள் யாவரும் இன்று ஏகமாய் அவர் நாமத்தை மாத்திரம் உச்சரிக்கும் நிலைமை. சிறு பிள்ளை முதல் பெரியவர் வரை, தேவனிடமாய்த் திரும்பினார்கள். தேவனைத் தேடுகிறார்கள். இன்று அவர்கள் கவனம் முழுவதுமாய் தேவனிடம் திரும்பியுள்ளது. இனி தேவன் என்ன செய்தார் என்று கவனியுங்கள்.

> "தேவன் இஸ்ரவேல் புத்திரரைக் கண்ணோக்கினார் ; தேவன் அவர்களை நினைத்தருளினார்"
> - யாத்திராகமம். 2 : 25

ஆதி. 12:1; 18:1 ; 26:24,28 ; 12:15 ஆகிய இடங்களில்
தேவன் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபோடு கூட இடைப்பட்ட இடங்களை காணலாம்.

ஆனால், தற்போது இஸ்ரவேல் தேவனைத் தேடுகிறது. இதைத்தான் தேவன் விரும்புகிறார். நாம் அவரைத் தேட வேண்டும், பலமாய்த் தேட வேண்டும்,
இடைவெளியில்லாமல் தேட வேண்டும் - ஆமென்.
நம்முடைய சத்தம் தேவ சந்நிதியில் எட்ட வேண்டும். அவர் ஏக்கத்துடன் இந்த நாட்களுக்காகக் காத்திருந்தார்.


# நம்முடைய வாழ்க்கையில் அடிமைத்தனம்

- தீய பழக்கங்கள் (புகை, குடி, போதை)
- தீய நண்பர்கள் (கெட்ட வழிகளைக் காட்டுபவர்கள்)
- கடன் தொல்லை, கவலை, நஷ்டம்
- பலவீனம், நோய்
- மாம்சத்திற்குரிய பாவங்கள், சுபாவங்கள்
- களியாட்டுகள் (ஆட்டம், பாட்டம், கொண்டாட்டம்)



இவைகளில் நாம் எதில் அகப்பட்டு இருந்தாலும் அதிலிருந்து விடுதலை செய்யக் கூடியவர் இயேசு மாத்திரமே, எகிப்து என்பது அடிமைத்தன வீடு. சில பல நேரங்களில், நாம் எகிப்தில் இருப்பதை மறந்து விடுகிறோம். நம்முடைய தேவைகள் சந்திக்கப்படும் வரை நாம் எங்கிருந்தாலும் நமக்குக் கவலையில்லை. ஆனால், அதே இடத்தில் இருந்து நமக்கு நெருக்கங்கள் வரும் போது தான் நம்முடைய கவனம் திரும்புகிறது. சிந்தனை தெளிவடைகிறது (யாத்தி. 13:3). நமது பலவீனமும், இயலாமையும், ஆதரவற்ற நிலைமையுமே நம்மை அவர் பக்கமாய் திருப்புகிறது. நம்மை விடுவித்து இரட்சிக்க கூடியவர் நம் தேவன் மாத்திரமே ! அல்லேலூயா

| | | | | |
|---|---|---|---|---|
| உணவு | உடை | பணம் | வேலை | சேமிப்பு |
| படிப்பு | கணவன்/ மனைவி | பிள்ளை / பாசம் | ஓய்வு | |
| நண்பர்கள் | விளையாட்டு | பொழுதுபோக்கு | | |




அந்த பட்டியலை பொறுமையாக வாசியுங்கள். இவை மொத்தமாக உங்களிடத்தில் இருந்து பறிக்கப்பட்டால் நீங்கள் என்ன செய்வீர்கள். அப்பொழுது தான், நம் ஒவ்வொருவருடைய கவனமும் அவர் பக்கமாய் திரும்பும். இது தான் அன்றைய இஸ்ரவேலரின் நிலைமை: **“அடிமைத்தனம்**" (யாத்தி. 2:23,24,25).

## கடினமான மனது

நமது கவனம் எதன் பக்கமாய்ச் சாய்ந்திருக்கிறது? தேவைகளையா, தேவைகளை சந்திக்கும் தேவனையா? நாம் ஆவலாய் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும், இந்த வேளையில் தான் தேவன் வருகிறார். பத்து வாதைகளால் எகிப்தை வாதித்து இஸ்ரவேலை மீட்க வருகிறார். தம் பிள்ளைகளை தம் பக்கமாய் ஈர்த்துக் கொள்கிறார். இப்போது, அவர் இஸ்ரவேலை விடுவித்து, மகிழ்ச்சிக்குள் ஆழ்த்திவிட்டார். தம் மக்களை ஈர்க்க அவர் செய்த அதிசயங்களால், அவர் எகிப்தை வாதித்தார்.

- மோசேயின் கோல் சர்ப்பமாயிற்று
- தண்ணீர் இரத்தமாயிற்று - பார்வோனின் இதயம் கடினமானது.
- தேசத்தின் மேல் தவளைகள், பின் பேன்கள், பின் வண்டுகள்
- மேலும் மகா கொடிதான கொள்ளை நோய்
- மனிதன் மேலும், மிருகம் மேலும் எரிபந்தமான கொப்பளங்கள்
- கொடிய கல்மழை
- எல்லைக்குள்ளே வெட்டுக்கிளிகள்
- 3 மூன்று நாள் மட்டும் காரிருள்
- முடிவாக எகிப்தின் தலையீற்றனைத்தும் சாகும்



ஒன்றன் பின் ஒன்றாக, உன் கவனத்தை ஈர்க்க, எகிப்து தேசம் எங்கும், ஒருக்காலும் உண்டாகாத பெரிய கூக்குரல் உண்டாயிற்று. ஆனாலும் தேவனுடைய வல்லமையை நேரடியாகக் கண்டு உணர்ந்த இஸ்ரவேலரின் அங்கலாய்ப்பைக் கவனியுங்கள்.

> "நாங்கள் எகிப்திலே இருக்கும் போது, நாங்கள் எகிப்தியருக்கு வேலை செய்ய எங்களை சும்மா விட்டுவிடும் என்று சொன்னோம் அல்லவா? நாங்கள் வனாந்திரத்திலே சாகிறதைப் பார்க்கிலும் எகிப்தியருக்கு வேலை செய்கிறது எங்களுக்கு நலமாயிருக்குமே என்றார்கள்"
> - யாத்தி. 16 : 3

> "...இந்த கூட்டம் முழுவதும் பட்டினியால் கொல்லும்படி நீங்கள் எங்களை புறப்படப்பண்ணி, இந்த வனாந்தரத்திலே அழைத்து வந்தீர்களே என்று அவர்களிடத்தில் சொன்னார்கள்".
> - யாத்தி. 14: 12

இஸ்ரவேலுக்கு இத்தனை அதிசயம் செய்தும், அவர்கள் கவனம் தேவன் பட்சயமாய் திரும்பவில்லையே - என்ன வேடிக்கை, ஒரு வேளை நாமும் அப்படித்தானோ!
ஆண்டவர் மீண்டும் சொல்கிறார்.
"பரிசுத்தப்படுத்திக்கொள்ளுங்கள்", நான் உங்களுடனே பேச விரும்புகிறேன்.

> "அவர்கள் நடுவிலே நான் வாசம் பண்ண, எனக்கு ஒரு பரிசுத்த ஸ்தலத்தை உண்டாக்குவார்களாக"
> - யாத்தி. 25:8

## தேவனை சந்திக்க ஆயத்தப்படுதல்

இவ்வாறாக எகிப்திலிருந்து இஸ்ரவேலை மீட்டு வந்த தேவன் இஸ்ரவேலுடன் பேசுவதற்காக, மோசேயைக் கொண்டு ஆயத்தப்படுத்தினார். இத்தனை அதிசயங்களுக்குப் பிறகு இஸ்ரவேலர் ஒவ்வொருவருடைய மனதிலும் தேவன் ஆழப் பதிந்திருக்க வேண்டும். தேவன் மக்களைச் சந்திக்க, ஆயத்தமாக இட்ட நிபந்தனையாவது,

> "இன்றைக்கும், நாளைக்கும் அவர்களைப் பரிசுத்தப்படுத்து"
> "அவர்கள் வஸ்திரங்களைத் தோய்த்து"
> "மூன்றாம் நாளைக்கு ஆயத்தப்பட்டிருக்கக்கடவர்கள்"
> - (யாத்தி 19 : 14, 15; ஆதி 35 : 2; லேவி 15: 16, 17, 18)

> "கர்த்தராகிய நான் பரிசுத்தராயிருக்கிறபடியினாலே நீங்களும் எனக்கேற்ற பரிசுத்தவான்களாயிருப்பீர்களாக”.
> - லேவி 20 : 26



என்னை விடுவிப்பார் யாருமே இல்லை என்ற இஸ்ரவேல் ஜனங்களுக்கு, தேவன் தாம் ஒருவரே அவர்களை விடுவிக்கக் கூடும் என்பதை உணரச் செய்தார். இஸ்ரவேலரின் மொத்த சிந்தனையும் தேவனால் ஆட்கொள்ளப்பட்டிருந்தது.

பொதுவாக, நம்முடைய சிந்தையை, நமக்கு விருப்பமானவர் ஆக்கிரமித்துக் கொண்டிருப்பர். சில சமயங்களில் நம்மை விடுவித்து, நமக்கு உதவி செய்த நபர், நமது சிந்தையைக் கவர்ந்தவராய் இருப்பார். இங்கு தேவன் எதிர்பார்ப்பதும் அதுவே, நம்முடைய சிந்தை முழுவதும், அவர் நிறைந்திருக்க விரும்புகிறார். அவர் மட்டுமே நிறைந்திருக்கவும் விரும்புகிறார். இதைத்தான் பரிசுத்த சிந்தனை என்கிறார்கள். பரிசுத்தரின் சிந்தையால் நிறைந்திருப்பதே, பரிசுத்த சிந்தனை எனப்படும். தேவன், எப்படி நம்மைக்குறித்த சிந்தையாய் நிறைந்திருக்கிறாரோ, அதைப் போலவே நாமும் அவரைப் பற்றிய சிந்தையால், நிறைந்திருக்க விரும்புகிறார். அவர் நினைவாகவே இருக்கும் போது வேறு சிந்தனைக்கு இடம் ஏது. இதுவே, நாம் பரிசுத்தம் அடைவதற்கு வழி. ஒரு மணவாட்டி, தன் மணவாளன் சிந்தனையினால் நிறைந்திருப்பது போல, நீங்களும் நானும் அவரைப்பற்றிய சிந்தனையினால் நிறைந்திருக்க விரும்புகிறார்.

இதுதான், தேவன் எதிர்பார்க்கும் பரிசுத்தம், அவரைக்குறித்த சிந்தனையினால் மாத்திரம் நிறைந்திருப்பது. பரிசுத்தத்திற்கு எதிர்பதம் பாவம், அவரையே நினைத்துக்கொண்டிருப்பது "பரிசுத்தம்" என்றால் தேவனை மறந்திருப்பதை வேதம் “பாவம்” என்று சொல்லுகிறது. இதைக்குறித்து, நாம் பின்வரும் அதிகாரங்களில் தொடர்ந்து தியானிப்போம்.

## வெளியரங்கமான ஆயத்தம்

இப்போது, இஸ்ரவேல் மக்கள் தேவனைத் தெரிந்துக் கொண்டவர்களாக, அவருடைய கரத்தால் மகிமையாய் மீட்கப்பட்ட ஜனமாய் இருக்கிறார்கள். ஆனாலும், தேவன் அவர்களுடைய முழு கவனத்தையும் பெற விரும்புகிறார். எனவே, மோசேயிடம் தம் ஜனமாகிய இஸ்ரவேலை பரிசுத்தப்படுத்தவும், ஆயத்தப்பட்டிருக்கவும் சொல்கிறார். அன்றைய இஸ்ரவேலர், தங்களை பரிசுத்தப்படுத்திக்கொள்ள எடுத்த முயற்சியாவது உடல் மற்றும் வஸ்திரம் சம்பந்தப்பட்டவைகள். இவைகள் வெளியரங்கமான காரியங்களைச் சார்ந்தது.

அன்று எகிப்திலிருந்து, இஸ்ரவேலை பலமாய் விடுவித்த தேவன், இன்றும் உலகத்தின் பிடியிலிருந்து நம்மை இரட்சித்து விடுவிக்கிற தேவனாயிருக்கிறார். தேவனை இதுவரை காணாது, அவருடைய வல்லமையான செயல்களால் மாத்திரமே அவரை அறிந்திருந்த இஸ்ரவேலுக்கு, தற்போது அவர் குரலைக் கேட்க ஓர் அரிய வாய்ப்பு.

இப்போது, தேவன் இட்ட நிபந்தனைகளை சற்று தியானிப்போம். தேவனுடைய வார்த்தைகள் மிகவும் ஆழமாகப் பொருள்படுபவை. அவர் ஞானம் ஆராய்ந்து முடியாதது. அவர் இஸ்ரவேலருக்குச் சொல்லிய ஆயத்த செய்கைகளை கவனியுங்கள்.

உன்னுடைய மக்களை பரிசுத்தப்படுத்து ...

- இன்றைக்கும், நாளைக்கும்
- அந்நிய தேவர்களை விலக்கி
- வஸ்திரங்களைத் தோய்த்து
- உடலுறவிற்கு விலகியிருத்தல்




இந்த செயல்கள், நாம் உண்மையிலேயே அவர் வருகைக்கு ஆயத்தமான நிலைமையை குறிக்கும்.

## உள்ளத்தில் ஆயத்தம்

உதாரணத்திற்கு வேலையிலிருந்து விடுமுறை நாட்களுக்காக வெளியூர் செல்லும் நபரின் ஆயத்தத்தை கவனித்திருக்கிறீர்களா? அவருடைய உள்ளம் சந்தோஷத்தினாலும், கவனம்- பயணத்திற்கு வேண்டிய எல்லா முக்கியமான பொருளின் மேலும், கண்கள் சென்று அடையப் போகிற இடத்தின் அழகான காட்சிகளினாலும் நிறைந்திருக்கும்.

அந்த நபர் செய்த வெளியரங்கமான ஆயத்த செயல்களை விட்டு, அவர் உள்ளத்தின் மறைவான ஆயத்தத்தைக் கவனியுங்கள். சில சமயங்களில், சாதாரணமான உலக மக்களைக் காணவும் நாம் நம்மை வெகு விமர்சையாக ஆயத்தப்படுத்திக் கொள்வது உண்டு. அவர் ஓர் உயர்பதவியில் இருக்கலாம். நம்முடைய அன்பிற்கும், பயத்திற்கும், மரியாதைக்கும் உரியவர்களாயிருக்கலாம்.



தன்னுடைய மணவாளனுக்காக அலங்கார ஆயத்தத்தில் இருக்கும் மணவாட்டி, அவள் அவர் மேல் கொண்ட அன்பை அந்த அலங்காரத்தில் காட்ட விரும்புவாள். பொதுவாக ஆயத்தத்தில் ஈடுபட்டிருக்கும் மக்கள், இடையில் எந்த வேலையையும் அனுமதிப்பதில்லை. அவர்களுடைய சிந்தை முழுவதும், தாங்கள் காணப்போகிற நபரைக் குறித்தே இருக்கும்.

இங்கும், இஸ்ரவேல் மக்களுக்கு தேவனை சந்திக்க ஆயத்தப்படுவதற்கு மூன்று நாட்கள் கொடுக்கப்பட்டது. தேவனாகிய கர்த்தரைக் காணவும், அவர் சத்தத்தை கேட்கப் போகிறோம் என்ற சிந்தனையில் நிறைந்து மற்றும் செயலில் அதற்குரிய ஆயத்தத்திலும் ஈடுபட்டிருந்தார்கள். இன்று தேவதூதர் உங்களிடம் வந்து இன்னும் மூன்று நாட்களில் தேவன் உங்களை வந்து சந்திக்கப் போகிறார் என்றால் உங்களுடைய ஆயத்தம் என்னவாயிருக்கும்? நம்மை நாமே ஆராய்ந்து, சுத்தம் செய்வோம்.

- தேவனுக்குப் பிரியமில்லாத காரியங்கள் (செயல்கள்)
- தேவனுக்குப் பிரியமில்லாத பொருள் (விக்கிரகம்)
- தேவனுக்குப் பிரியமில்லாத உடை (அழுக்கு வஸ்திரம்)

என அவருக்கு பிரியமில்லாததை விலக்கி, அவருக்கு பிரியமானதை அறிந்து மாற்றிக்கொள்வோம். உங்களை ஆயத்தப்படுத்த அந்த மூன்று நாட்கள் போதுமென்று நினைக்கிறீர்களா? ஒவ்வொரு நொடியும் நாம் நம்மை ஆராய்ந்து, சரி செய்து கொண்டிருப்போம். அந்த ஆயத்தநாட்களில் எவராவது வந்து தொந்தரவு செய்தால் அவரை கண்டு கொள்ளவே மாட்டோம். மணவாட்டி தன்னை முழுவதும் அலங்கரித்து, பரிசுத்தமாய் மணவாளனிடம் கொடுக்க முற்படுவாள். அதுவே அவளுடைய வாழ்வின் தவம். மணவாளனே அவளுடைய உண்மையான தாகம்.

ஆக "பரிசுத்தப்படுத்து" என்பதின் பொருள், இஸ்ரவேல் கர்த்தரைப் பற்றிய சிந்தனையினால் நிறைந்திருக்க ஆயத்தப்படுத்தப்பட வேண்டும் என்பதாகும். அவர் சிந்தையால் நாம் நிறைந்திருந்தால் நாம் ஆயத்தத்தில் கண்டிப்பாக ஈடுபட்டிருப்போம். அந்த ஆயத்தத்தின் நடுவில் யாருக்கும் இடமில்லை, ஓய்வில்லை, களியாட்டுகளும் இல்லை.

> "தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு மிகுந்த ஆவலோடே காத்திருங்கள்"
> - 2 பேதுரு 3 : 12

இதுவே தேவன், இரண்டாம் முறையாக மோசேயைக் கொண்டு தன்னுடைய மக்களிடம் இடைப்பட அவர் எடுத்துக்கொண்ட முயற்சி. தம்முடைய பிள்ளைகளின் கவனம் முழுவதும் தம் பக்கமாக திரும்ப வேண்டும். தம்மை ஆவலாய்த் தேட வேண்டும். தம்முடைய சிந்தனையினால் நிறைந்திருக்க வேண்டும் என விரும்பினார். தேவன் நம்முடன் இடைப்பட, அவரைக் குறித்த சிந்தையோடு ஆயத்தப்பட்டிருக்கக்கடவோம். இம்முறை, தேவன் நம்மிடத்தில் நெருங்கி வருவதில் வெற்றி கண்டாரா? தேவன் எதிர்பார்த்த பரிசுத்தமும், ஆயத்தமும் நம்மிடத்தில் இருந்ததா, என்று தொடர்ந்து ஆராய்வோம். நான் உங்களை பார்க்கவும், பேசவும் வருகிறேன், ஆயத்தமாயிருங்கள் என்று சொன்னவர், தம்முடைய மக்களிடம் என்ன பேசினார் என்பதை தொடர்ந்து ஜெபத்துடன் தியானிப்போம்.

## சிந்தனைக்கு

- உங்களுடைய வாழ்க்கையில் தேவன் உங்களை ஈர்த்துக்கொள்ள செய்த அதிசயங்கள் என்ன?
- உங்களை அடிமைத்தனமான நாடாகிய எகிப்தின் குணத்திலிருந்து மீட்டாரா?
- நம்முடைய கூக்குரல் தேவனை எட்டுகிறதா?
- நான் தேவனை அறிந்திருக்கிறேனா? அவர் யார்? எப்படி பட்டவர்?
- அவர் என்னிடம் எதிர்பார்ப்பது என்ன? அவரைக் காண நான் ஆயத்தமா?
- ஆலயத்தில், யாருடைய சத்தத்தை நான் கேட்கச் செல்கிறேன்? யாரைக் காணச் செல்கிறேன்?
- என் உடைகள் தேவ சிந்தனையை வெளிப்படுத்துகிறதா? யாரைப் பிரியப்படுத்தும் வகையில் நான் உடை அணிகிறேன்? (என்னை / மற்றவரை / தேவனை)
- ஞாயிற்றுக்கிழமைக்கு, ஆயத்தநாளாக மற்ற ஆறு நாட்கள் இருந்ததா?
- தேவனுக்குப் பிரியமில்லாததை விலக்கினேனா?
- மனுஷனுடைய சத்தம் அல்லது தேவனுடைய சத்தம் எது சிறந்தது? ஏன்?
- பரிசுத்தம் என்றால் என்ன? நம்முடைய கவனம் எவரிடத்தில் ஈர்க்கப்பட்டிருக்கிறது? எதனால்?
- என் உதவிக்கு தேவனை அழைக்கிறேனா அல்லது என்னால் முடிந்தவரையென்று நானே போராடுகிறேனா?
- தேவன் நம் தேவையா அல்லது நம் தேவைகளுக்காக தேவன் தேவைப்படுகிறாரா?